XV.B.18
1456

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ வரகுண தேவர் சரித்திரம்.

[illegible]

[illegible] செய்யுள் 20.

ம-ா-ா-ஸ்ரீ. சை. முனிசாமி முதலியாரவர்கள்

மாணாக்கருளொருவராகிய

பெரம்பூர். புராணிகர்.

பெ. முத்துசாமி உபாத்தியாயரால்

இயற்றப்பட்டு,

மெய்யடியார் கட்டினொருவராகிய

ம-ா-ா-ஸ்ரீ. நுங்கம்பாக்கம்

முருகேசநாயகரால்,


சென்னை புரசை

நற்றமிழ் விலாசம் பிரெஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] சுபகிருது௵ மீனமாதம். [அணா ?

16, சரவணப்பெருமாள்முதலிவீதி,



ஸ்ரீ வரகுணதேவர்.

மருதவாணர்.

# சாற்றுக்கவிகள்.

இஃது, ஸ்ரீமத். பரமஹம்ஸ பரிவ்ராஜக வர்த்தகனிகா
சாம்ராஜ்ய மகா விக்கிரமாதித்ய வீரதீர
கம்பீரஸ்வபாவ சதுராவதானி முத்தமிழ்ச்
சாகரம். ஸ்ரீலஸ்ரீ. செய். வாட்.
வி. ரா. பொன்னேர்க்கவிராஜ
கேசரியா ரவர்களியற்றிய

## இணைக்குறளாசிரியப்பா.

திருவளர் தாமரைத் திசைமுகக் கிழவோன்
பண்ணைப் படைப்பினிற் பார்மிசை யுடற்றின்
விண்ணொடு நிலத்து வியன்பெருங் குடிமிடி
பொலங்கிரி குழைத்து கலங்களைப் பரிதியின்
குறைபிரு ளகற்று வருங்கயற் கேதனம்
இயவனர் முழுவி னணைவுற நிற்றி
மதனரீ யவனிசை பதிக்குடை நிழற்ற
ஏற்றிருக் காய்த்திரு நாற்றிசை பரப்பினன்
திசையிதழ்ப் படைவார் செஞ்சனைக் கசைதரு
பொருகைரு முலைமுற பூதிருபுயப் பெருந்தான்
சேகர மொய்பெரு மாசினர் ற் றன்பார்
அறிஞர் திரண்டெழு மண்ணை மொழி
ஆல பெரியசிய மெருகவார் நிலையின்

எழின்மிகு மலர்விழி யிலகுறாஉஞ் சுடிகைச்
சிறுநுத னறைபுரை தெள்ளுநரை வரைமான்
வாமந் தழீஇய வான்முத லிறைவன் [உடம்
மதனகு நோன்றாண் மணங்கொளீஇ வழுத்துமு
மறக்கோ லறியா வறக்கோன் மன்னர்கோன்
வேம்பிணர்த் தென்னவன் விளம்பிசைத் திசையோன்
திரகுணம் படைத்த வரகுண தேவன்
ஆர்வ மீக்கூர்ந்த வமுதவான் சரிதம்
செந்தமிழ்க் கத்தியச் சீரிய நடையா
லியற்றுபு தந்தன னினிதெனக் கொண்மின்
அன்னவன் யாரெனி னறைகுவல்
குண்டுநீர்க் கார்கோ ளுண்டவக் குடமுனி
வரம்பினிற் படுத்த பெரும்புகழ்ச் செந்தமிழ்க்
கலைபல வுணர்ந்தோன் கண்ணுதற் பெருமான்
திருவிளை யாடலுந் திருத்தொகைக் குறிப்பின்
அறிந்து சேக்கிழா ரருளிய புராணமுஞ்
சூர்தடிந் திலகுறாஉம் வேற்கரப் பெருமான்
புண்ணிய புராணமும் புந்தியி னிறீஇக்
கேட்குநர் யாரும் பாற்கட லமுதம்
உண்டனர் போலக் கொண்டக மகிழ
உபந்யசிக்கு முயர்மொழிப் புலவன்
முத்துச் சாமியென மொழியும்
நத்திய சற்குண னாவ லோனே.

இஃது

சிந்தாதிரிப்பேட்டை வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ.

## வா. மகாதேவ முதலியாரவர்களியற்றிய

### நேரிசை வெண்பா.

வன்பறியா நெஞ்சின் வரகுணதே வன்சரித
மன்புறவே யாரு மறிந்துய்ய-வின்புதவுந் டே.
தென்மொழியிற் றீட்டினான் சேர்ந்தானந் தக்கண
மன்னுமுத்து சாமியென்பான் மாண்பு.

இஃது, சென்னை பச்சையப்பன்காலேஜ் தமிழ்ப்
பண்டிதர் ஸ்ரீமத். கிருஷ்ணசாமிமுதலியா
ரவர்கள் மாணாக்கரி லொருவராகிய
ம-ா-ா-ஸ்ரீ. ஆ. மே. சென்னகேசவலு
நாயுடவர்களியற்றிய

### நேரிசை வெண்பா.

வரகுணதே வர்சரிதம் வண்டமிழா லன்பாய்
திரமுடனே கத்தியத்திற் செய்தான்-பரனடியை
பத்தியுடன் முன்பணிவோன் பல்கலைக ணன்குண
முத்துசா மிப்புலவன் முன். [ர்ந்தோன்

## சிறப்புப் பாயிரம்.

மகாவித்துவான் ம-௱-௱-ஸ்ரீ.
கா. இராமசாமி நாயுடவர்கள் மாணவர்
ம-௱-௱-ஸ்ரீ. கோ. கோவிந்தராஜமுதலியாரவர்கள்
இயற்றிய

### நிலமண்டில வாசிரியப்பா.

கேண்மின் புலவீர் காண்மின் னறிவீர்
மாண்பமை முதுநீர் மகியினிற் செங்கோல்
கோதற வோச்சிக் குறைமதிச் சென்னி
மாதொரு பாகர் மலரடி யுளங்கொடு
ஒப்பிவர்க் கிலையெனு மப்பெரு மன்பராய்
வீற்றிருந் தருளிய நாற்றிசை யவிர்புகழ்
வரகுண தேவர் வான்பெருஞ் சரிதம்
"வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்
குவளைப் புனலிற் றவளை யரற்ற
வீசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனைப் பிறப்புக் கென்ன
விடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி

யும்மைப் போல வெற்றித் தலையுங்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்துங்
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்தன வென்று நாய்க்கட்ட பெடுத்துங்
காம்பவிழ்த் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய வன்பின் வரகுணதேவ ரொடு
பட்டினத் தடிகண் முட்டறத் தொகுத்துச்
சொன்ன சரிதமொடு சுவைமிகு நற்றமிழ்த்
திருவிளை யாடலின் மருவிளை யாதுமை
மதுரையி லிருந்தே யெதிகளுக் கெட்டாக்
கயிலையை யிறைவர் காட்டக் கண்டு
கூறரு களியகங் கொண்ட விபரமும்
புத்தமு தருந்தினர் நத்தினர் விரும்பும்
முத்தியை யடைந்த வித்தகச் சீர்த்தியும்
சுருக்கியும் விளக்கியுஞ் சொல்சீர்த் தமிழினில்
கத்திய நடையாய்க் கழறின னவன்றன்
பெரிய புராணமும் பேறுறு காந்தமும்
திருவிளை யாடலுந் தேர்ந்தறிந் தெவரும்
பெருவியப் பெய்தப் பிரசங்கஞ் செய்வோன்
மொழிகுணன் முத்து சாமியென மொழி
உபாத்தி யாய ஞாமுறு மன்பால்
கண்டோர் யாருங் களியகங் கொள்வே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பாயிரம்.

## விநாயகர் துதி.

சத்தி யாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்ய பொற்பாதமே.

## பரமசிவம் துதி.

விரவு மாயிரந் திருமுகப் பகிரதி விரிக்கு, முரவு
வெண்டிரை யொருபுறங் கலைப்பவொண் சடை
மே, லரவ கங்கணை யொடுக்குற வருநடம் புரியும்,
பரம னங்கழற் பரிபுரப் பதம்பணி குதுமே.

## பராசத்தி துதி.

முதிராத முலையாளை யிலைவயிற்றி னுடையாளை
மூத்தா டன்னைப், புதியாளைப் பழையவளை யுலக
மெலாம் பெற்றெடுத்த புவனத் தாயைக், கெதியாளை
மலைமகளை யெவ்வுயிர்க்கு முயிரான கிருபையாளை,
விதியாளை முக்கணனூர் பதியாடன் மலரடியை
விரும்பிக் கொள்வாம்.

## சுப்பிரமணியர் துதி.

ஆறிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை
போற்றி, ஏவருந் துதிக்கநின்ற வீராறு தோள் போ

ற்றிக் காஞ்சி, மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி
போற்றி யன்றென், சேவலு மயிலும் போற்றித்
திருக்கைவேல் போற்றி போற்றி.

## வாணி துதி.

சாற்று நற்றமிழ்ப் - பேற்றுக் கென்குறை
நோற்று வாணிதாள் - போற்று நெஞ்சமே.

## திருநந்தி தேவர் துதி.

செம்பொரு ளாகமத் திறந்தெ ரிந்தரு
நம்பவ மறுத்தநன் னந்தி வானவ
னும்பர்த மலிமுடி யுரிஞ்சிக் கன்றிய
வம்பவிழ் மலரடி மனத்தி ருத்துவாம்.

## நால்வர் துதி.

போற்றி ஞானசம் பந்தர் பொலன்கழல்
போற்றி நாவுக் கரயர் புகழ்ப்பதம்
போற்றி வன்றொண்டர் பொன்னடி நாண்மலர்
போற்றி மாணிக்க வாசகர் பொற்சரண்.

---

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

# முகவுரை.

கடற்சூழ்ந்த வையகத்துள் ஒவ்வொருவருந், அடைதற்பாலது, கடவுளிடத்து அன்பு ஒன்றே. அவ்வன்பானது, பாலில் நெய்யும் விறகிற் றீயும் போன்று ஒருவர் காட்டற்பாலதன்று. அவ்வன்புடைமையால் வெளிப்படுஞ் செயல்களைக் கண்டவிடத்து, இவை யுண்மையால், இங்கே அன்புளதென்று நிச்சயித்துக்கொளற் பாலதாகும். அது பொய்யாமொழி. "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்-புன்கணீர் பூசறரும்" எனவும். திருக்களிற்றுப்படியார். "சுரந்த திருமுலைக்கே ஆயதிரு ஞானஞ், சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்-சுரந்த, தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த, மனமுடையா னென்பிருந்தவாறு." எனவும். வருவனவற்றானறிக.

முற்றறிவு முத்தொழிலுடையராகித், தம்பயன் கருதாது மலசம்பந்தராகிய, ஆன்மாக்கண்மேல் வைத்தப் பெருங்கருணைத் திறத்தால், அவர்களுக்குத் தனு, கரண, புவன, போகங்களைக்கொடுத்து, ஆணவமலத்தை நீக்கி, அறிவைவிளக்கிப் பாசவிமோக்கமும், சிவத்துவ விளக்கமும் செய்யும் பரமபதியொருவரே. அவர் சிவனாகலின், அவருக்கே அன்பு செலுத்தல்வேண்டும். சிவனிடத்து அன்புடைமைக்கு அடையாளம், அச்சிவனுடைய உண்

மையை நினைத்தல், கேட்டல், காண்டல் செய்த பொழுதே தன்மனம் நெகிழ்தலும், உரோமஞ்சிலிர்த்தலும், நாத்தழுதழுத்தலும், சொற்றடுமாறலும், அவர் உவப்பனசெய்தலும், வெறுப்பன ஒழித்தலும், அவரடியாரைக் கண்டவிடத்து அவராகப் பாவித்து, அவ்வடியாருக்கு நேரிட்ட மனக்குறையை நீக்கலும், போஷித்தலும் பிறவுமாம். இவ்வன்பு இல்லாவிடத்துச் சிவனையடைதல் எவ்வழியானுங்கூடாது. அது திருநாவுக்கரசு நாயனார்

தேவாரம்.

"உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலாற்
கள்ள முள்ளவ ருக்கருள் வானலன்
வெள்ள மும்பர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே."

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப ரவர்தமை நாணியே." எனவும்.

திருமந்திரம். "என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப், பொன்போ லெரியிற் பொரிய வறுப்பினும், அன்போ டுருகி யகங்குழைவார்க்கன்றி, என் பொன் மணியினை யெய்தவொண் ணாதே." எனவும். மணிவாசகம். "தேவ தேவன்மெய்ச் சேவகன் றென்பெ ருந்துறை நாயகன், மூவ ராலுமறி

மெய்யா னுமுத லாய வானந்த மூர்த்தியான், யாவ ரா
யினு மன்ப ரன்றி யறியொ ணாமலர்ச் சோதியான்,
தூய மாமலர்ச் சேவடிக்க ணஞ்சென்னி மன்னிச்
சுடருமே." எனவும். திருக்களிற்றுப்படியார்.

"அன்பேயென் னன்பேயென் றன்பா லழைத்
தழைத்திட், டன்பேயன் பாக வறிவழியும்-அன்
பன்றி, தீர்த்தந்தியானஞ் சிவார்ச்சனைகள் செய்
யாது, சாத்தும் பழமன்றே தான்." என வருவன
வற்றானறிக.

இவ்வன்பு பல பிறவிகள்தோறும் பலன் கருதாது செய்த புண்ணியமேலீட்டினால், சிவனருளிச் செய்யவரும். சிவனருளின்றி இவ்வன்பு ஒருவழியாலுங் கைகூடாது. அதை வாயுசங்கிதையில் "ஆங்கவ னருளாற் பத்தி யன்றுண்டாம் பத்திய, லவனரு ளுண்டாம். "வீங்கிய பத்தி பற்பல பிறப்பில் வைத்தங்க னுரைத்திடும் படியே, தீங்கறு கருமமியற்றிய பலத்தாற் சிவனருள் செய்திட வருமால், ஓங்கிய பத்தியாற் சிவதருமமொழிவறப் புரிந்திடப் படுமால்."

எனக்கூறுமாற்றானறிக. இடையறாது முறுகிவளரும் அன்பின் முதிர்ச்சியிலே சிவம் விளங்கும்.

மணிவாசகம்.

"பத்திவலையிற்படுவோன் காண்க" எனவும்.

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பி
னில் விளைந்த வாரமுதே, பொய்ம்மையே பெருக்

சிப் பொழுதினைச் சுருக்கும் புழுக்கூடப் புலையனேன் றனக்குச், செம்மையே யாயசிவபத மளித்த செல்வமே சிவபெருமானே, இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே னெங்கெழுந் தருளுவ தினியே." அன்பும் சிவமும் வேறுபடா அபேதமாய் நிற்கும். அது, திருமந்திரம்.

"அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே."

எனவும். மணிவாசகம்.

"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத் தமுதே, ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி யுள்ளவா காணவந் தருளாய், தேறலின் றெளிவே சிவபெரு மானே திருப்பெருந் துறையுறை சிவனே, ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த வின்பமே யென்னுடை யன்பே."
என வரும்.

ஆதலின் சிவனை யாமெல்லோரும், விரும்பி யவரிடத்தே மாறாத அன்பு செய்தல்வேண்டும். இவ்வன்பின் தன்மையால் முத்திபெற்றார் பலருளர். அவருள் ஸ்ரீ வரகுணதேவர் சரித்திரத்தை,யானிதுவரை கற்றுங்கேட்டு முள்ளபடி, என் சிற்றறிவிற் போந்தவா றென்குருவின் றிருவருளை முன்னிட்டு

எழுதியுள்ளேன். ஆதலின் பெரியோர் பிழையு
ந்தேற்பொறுப்பீராக.

இந்நூலை யெழுதும்படி யென்னைப் பல்காலு
முற்சாகப்படுத்தித் தாமுமோர் சாற்றுக்கவியுமீந்து
மூலையிலிருந்தவனை முற்றத்திலிழுத்தாற் போன்றெ
ன்னை வெளிவரச்செய்த ம-ள-ள-ஸ்ரீ. கோ. கோவி
ந்தராஜ முதலியாருக்கு வந்தனமளிக்கின்றேன்.

என்னையு மிந்நூலையு மொருபொருளாக வெண்
ணிச் சாற்றுக்கவிகளீந்த பாவாணர் பலரையும்
பணிகின்றேன்.

இந்நூற்கு வேண்டுமுதவிகளைப் புரிந்து, இதை
முற்றுவித்த வெனது ஆப்தநண்பரு ளொருவரா
கிய ம-ள-ள-ஸ்ரீ. ந. முருகேச நாயகரது கருணை
யென்றுமென்றும் மறக்கற்பாலதன்று.

இந்நூலை யாதொரு பிழைபாடுமின்றி மிகச்சிர
த்தையோடச்சிற்பதிக்க ம-ள-ள-ஸ்ரீ. பு. நாராயண
சாமிப் பிள்ளையும், ஷையார் நற்றமிழ்விலாசமென்
னும் அச்சியந்திரசாலையும், பல்லாண்டு பல்லாண்
டாக வாழ்கவெனப் பரமன்றிருவருளை வேண்டு
கின்றேன்.

இங்ஙனம்

பெ. முத்துசாமி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ வரகுணதேவர் சரித்திரம்.

## சபாபதி துதி.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

சத்திபீடங்கள் அறுபத்து நான்கினுள், முதன்மையானதும், சிவபெருமானால் அறுபத்துநான்கு திருவிளையாடல் புரிந்ததும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புகளுற்றதும், சிவபெருமான், உமாதேவியார், முருகக்கடவுள் ஆகிய இம்மூவரால், அரசுசெய்ததும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் இட்ட திருவேடு எதிரேறப்பெற்ற வைகைநதியினால் பலவளங்களடைந்ததுமான மதுரைமாநகரை அரசு செலுத்திவந்தவர் திருநகரங்கண்ட குலசேகர பாண்டியர். அவர் குமாரர், மலயத்துவச பாண்டியர். இவர் புத்திரப்பேறின்மையால், புத்திரகாமேஷ்டி யாகஞ்செய்து பூர்வ

புண்ணிய மேலீட்டினால் உமாதேவியாரையே புத்திரியாராக எய்தும் பெரும்பேற்றை யடைந்து, அன் சிவபெருமானது திருவடி நீழலிலடைந்தனர். தேவியார் அரசுசெய்து வந்தனர். சிவபெருமான் சோமசுந்தர பாண்டியராக வெழுந்தருளிப் பிராட்டியாரைத் திருமணமுடித்தபின்னர்த் தான் இராஜரீகஞ்செய்து, தன் குமாரராகிய உக்கிரபாண்டியருக்கு முடிசூட்டினர். இவருக்குப் பின் இவர் குமாரர், வீரபாண்டியர். இவர் புத்திரர், அபிஷேக பாண்டியர். இவர் பிள்ளை, விக்கிரமபாண்டியர். இவர் சேய், இராஜசேகர பாண்டியர். இவர் தனயர், குலோத்துங்க பாண்டியர். அவர் புதல்வர், அனந்தகுண பாண்டியர். அவர் மைந்தர், குலபூஷண பாண்டியர். அவர் பிள்ளை, இராஜேந்திர பாண்டியர். அவர் புத்திரர், இராசேசபாண்டியர். அவர் சேய், இராஜகெம்பீர பாண்டியர். அவர் குமாரர், பாண்டிவங்கிஷ தீபபாண்டியர். அவர் புத்திரர், புரந்தரசித்துப் பாண்டியர். அவர் பிள்ளை, பாண்டிவங்கிஷபதாக பாண்டியர். அவர் மைந்தர், சுந்தரேசபாத சேகரபாண்டியர் முதலிய பாண்டிய வரசர்கள், ஒருவர்பின் னொருவர் புத்திரராகத்தோன்றி, அரசாண்டு வந்தார்கள்.

இச்சுந்தரேசபாதசேகர பாண்டியருக்குச் சைவமோங்கித் தழைக்கவும், அன்பினால் ஆன்மகோடிகள் கடைத்தேறவும், சைவத்தின்மேற் சமயமில் லையெனும் உண்மை விளங்கவும், சோமசுந்தரக்

கடவுளாருடைய கிருபையால் கோடி மன்மதர்கள் ஒருங்குகூடி யொருவடிவமாகப் பிறந்ததைப்போல மாவரகுணபாண்டியர், புத்திரராகத் திருவவதாரஞ்செய்தனர். தந்தையார் இவருக்குச் செய்யவேண்டிய ஜாதகர்ம கர்மங்களையும், சாஸ்திரவிதிப்படி முடித்து, ஐந்தாவதில் பள்ளியிலமர்த்தினர். இவர் நூல்களை ஐயந்திரிபறக்கற்று அரசர்க்குரிய கலைகளிலும் வல்லுநராய், முற்பிறப்பில் பயன்கருதியாது செய்த சிவபுண்ணியமே மேம்பட்டுறத், சிவபெருமானிடத்து மென்மேலும் பெருகி யெழுந்த அன்பின் முதிர்ச்சியினால் விபூதி, உருத்திராக்ஷ முதலிய சிவசின்னங்களைத் தரித்துக் காலங்கடவாதும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் முழுகிச் சோமசுந்தரக் கடவுளையும், அங்கயற்கண்ணம்மையாரையும் தரிசித்து வருவாராயினர்.

சந்திரசேகரபாண்டியர், தான் தாங்கின பூபாரத்தை இவர் தோண்மேலேற்றித் தான் தேவநாயகராகிய சிவபெருமானது திருவடிநிழலின் கீழமர்ந்தனர். வரகுணபாண்டியர் எங்கும் சைவந்தழைக்கச் செங்கோல்செய்து தன்னாலும், தன் சேனைகளாலும், பகைவராலும், கள்வராலும், விலங்காதி முதலியவைகளாலும் தன் குடிகளுக்கோர் பயமுமொன்று நேரிடாதபடிக் காத்து, மனுநீதி விதிப்படி செங்கோலோச்சி வருங்காலத்தில், ஓர்நாள் வேட்டைமேலெழுந்த பெருவிருப்பினால் குதிரையேறிக்

மகாசேனாசமூகமும், [illegible]

தன் நாட்டை நீத்துக் காட்டுக்குச் சென்றனர். அக்காட்டிலுள்ள புலி, கரடி, யானை, சிங்கம், பன்றி, மான்முதலிய மிருகங்களைச் சூரியன்மேற்றிசைச் செல்லுங்காறும், கணைகளைவிட்டுக் கொன்று மிகச்சந்தோஷமாகத் தன் *வாசியை மனத்தைக் காட்டிலும், வேகமாகச் செலுத்திவராநிற்க, அவ்வழியினின்ற †படுமரத்தின்கீழ் ஓரந்தணன் றுயின்றிருந்தானாக. அதிவேகமாகவரும் *இவுளியானது மேற்கூறிய மறையவன்மார்பில் தன் கால்வைத்துச் செல்ல, அப்பிராமணன் அறிவழிந்திறந்தான். அதனையறியாத பாண்டியர் தானேறிவந்த *துரகத்தோடு தன் கோயிற்குச் சென்றனர். இறந்த அந்த வேதியனுடைய உடலைக் காலையில், அவன் உறவினர்களாகிய ‡விப்பிரர்கொடுத்துப் பாண்டியருடைய அரண்மனையெய்தி, இச்செய்தியைக் கூற. அரசன் வருத்தமுற்றுஅப் ‡பூசுரர்கையில் மிகுந்த பொருளைக்கொடுத்து, உயிர்நீத்தப் பிரேதத்தை தகனகிரியை முற்றுவித்தனர். மனத்தில் மிகவும் வருத்தமடைந்த வரகுணபாண்டியரை, பிரமஹத்தியானது தொடர்ந்து பிடித்துக் கொண்டது. வரகுணபாண்டியர் தன்னைப் பற்றிய பிரமஹத்திக்குப்பிராயச்சித்தமாக, ‡அந்தணர்கூறியபடி யாகஞ்செய்தும், அடிபிரமாவும், நடுவிஷ்ணுவும்,முடி ருத்திராம்சமுமாகிய அரசமரத்தைப் பிர

* குதிரை. † ஆலமரம். ‡ பிராமணர்.

தக்ஷிணஞ்செய்தும், பார்ப்பார்களுக்குக் கோதான முதலிய தானங்கள் புரிந்தும், பசுக்களுண்ண அறுகம்புல்லீந்தும், பஞ்சகவ்வியத்தையும், பசுவினது கொம்புகள் தோய்ந்த நீரையுங்குடித்தும், இன்னும் பலவகைப்பட்ட காரியங்களையுஞ் செய்தார். அப்பிரமஹத்தியானது, நீங்காத வலிமையுடையதாய் மேலோங்கி உம்மென்றுறுத்தும், பார்வைத்தட்டும், எங்கும், பெருமூச்சுவிடும், கைகொட்டும், சிரிக்கும், அழும், பழிகொடுவென்னும், தனது பிளந்தவாயினைத்திறக்கும், இரைச்சலிடும், அணுவைப்போற் சிறுகும், மலையைப்போ லுயரும், பழிவாங்குவேனென்று பிடிக்கும். இவ்வாறு ஒருநிமிஷமாகிலும் தன்னைவிட்டு நீங்காத, பிரமஹத்திக்குப் பயந்தவராகிய வரகுணபாண்டியர், ஒளியிழந்த சந்திரன்போலவும், வேழமுண்ட விளங்கனிபோலவும், விஷமிழந்த நாகம்போலவும், நாளுக்குநாள் ஒடுங்குவதை *வேதபாரகர்கண்டு, ஓ அரசனே! இப்பிரமஹத்தித் தோஷத்தைப் பிரமனது சிரத்தைக் கொய்த தர்மமூர்த்தியாகிய நம் சோமசுந்தரக்கடவுளை, அம்மையாரோடு ஆயிரத்தெட்டுதரம் பிரதக்ஷிணஞ்செய்து வருவாயாகில், இப்பிரமச்சாயைக்குந் தீர்வுகாட்டி யருளுவர் என்றனர்.

அவ்வார்த்தையைச் செவியேற்ற பாண்டியர் அவ்வாறே சென்று பொற்றாமரைத் தீர்த்தத்தில்

* பிராமணர்.

மூழ்கி, ஆலயத்தை ஆயிரத்தெட்டுதரம் பிரதக்ஷி ணஞ்செய்து, சுவாமி திருமுன்னர் நின்று, எம்பெருமானே! இந்திரன் விருத்திராசுரனைக் கொன்றதனாலடைந்த பிரமஹத்தியையும், காதினாலுங் கேட்டற்கரிய கொடுஞ்செய்கையான தாயைப்புணர்ந்து, தகப்பனைக் கொலைசெய்த பூசுரனது மாபாதகத்தையும், இவர்களறிந்து செய்திருந்தும் விலக்கினீர். அங்கயற்கண்ணம்மையை ஆகத்தமர்த்திய சோமசுந்தரக் கடவுளே! யானோ அறியாமையாற் செய்த இப்பிரமஹத்தியை நீக்குதல், தேவரீருக் கரிதன்றே, என்று வணங்கி நின்றனர். அத்தருவாயில் ஆகாயத்திலோர் அசரீரி வாக்குண்டாயது. அதென்னெனின்: அரசனே! எம்மையொருதரம் வலம்வந்தால் அஸ்வமேதப்பலன் கிட்டும். ஆகையால் நீசெய்த பிரதக்ஷிணத்தால் மகிழ்வுற்றேம். இனி அப்பிரமஹத்திக்கு அஞ்சதலொழிக. இரப்போர்க்கீதற்பொருட்டு, வைப்புத் திரவியஞ் சேர்த்துவைக்கு மீகையாளர் போன்று, பொற்கட்டிகளை முத்துக்களோடு, அலைகளாகிய கைகளால் வாரிக்கொடுவந் தொதுக்குந் துறையையுடைய பொன்னிநாட்டரசனாகிய விக்கிரமச்சோழன், உன்னோடு போர்செய்ய வருவன். நீயுமவனோடு எதிர்ப்பாய். நமதருளால் அவன் உனக்குத் தோற்றோடுவன். நீயுமவனைத் துரத்திக்கொண்டோடுஞ் சமயத்து, நம்மை நாமே அர்ச்சனை செய்த தலமாகிய, திருவிடைமருதூரை யடை

வாய், உன்னுடைய பிரமஹத்தியை அங்கே ஒழி
ப்போம் என்றருளினர்.

வரகுணபாண்டியர் சிவபெருமானது திருவரு
ளைத் துதித்து, எனது தலைவரே! தேவரீர் அருளிச்
செய்த தலத்தில் மருதமரத்தின்கீழ் தாங்களெழு
ந்தருளிய விதமும், எமையாமருச்சித்த தலமென்
றீர்! அதன் காரணமும், அடியேற்கருட் செய்ய
வேண்டுமென்று பிரார்த்தித்தார். அதைக்கேட்ட
சிவபெருமான் மகிழ்ந்து, அரசனே! கேட்பாயாக:
நாம் திருக்கைலையில் உமாதேவியாரோடு வீற்றிரு
க்குஞ் சமயத்தில், தேவியார் நம்மைப் பணிந்து,
தேவரீர், பூவுலகில் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்தி
ரங்களைக் காட்டியருளவேண்டுமென்று கேட்ட
னர். அவ்வாறே நாமெழுந்தருளி யிருந்த எல்
லாத் தலங்களையும் காட்டிக்கொண்டு, காவிரித்
தென் கரையிலுள்ள திருவிடைமருதூர்க்கு எழுந்
தருளுகையில், திருக்கைலையானது, எம்மையும்,
நாயகியாரையும் பிரிவாற்றாது மருதவிருக்ஷ வடி
வேற்று நிற்கக்கண்டு, நாம் தேவியாரோடு அதன்
கீழெழுந்தருளினோம். அன்றுமுதல் அப்ப
திக்கு, மருதூரென்னுந் திருநாம முண்டாயது.
நாம் மருதினடியில் எழுந்தருளியவிதம் இதுவா
கும். வேந்தனே! எமையாமருச்சித்த விதமுஞ்
சொல்வோங் கேட்க: காசிபர் முதலிய முனிவர்
கள், அகத்தியமுனிவருடைய கட்டளைப்படி, ஆ

ஞ்செய்ய வாணியால் வேதாகமங்களி னுண்மை ப்பொருளை யுணர்ந்து, இலட்சுமியால் சிவபூஜா வுபகரணங்களைப் பெற்று, உமாதேவியா ரருளை நாடி, ஓர் நந்தவன முண்டாக்கித் தவஞ்செய் தார்கள்.

பார்வதியார் பிரசன்னமாக: முனிவர்கள் பர வசத்தர்களாய்த் தொழுது, தாய! தேவீரது திருநாயகராகிய, சிவபிரான் தரிசனம்வேண்டுமெ ன்று வரங்கேட்டார்கள். உமாதேவியார், நம்மைத் தமதிதய கமலத்தில் நினைத்தனர். நாம் சோதி மயமான இலிங்கமூர்த்தியாய், எழுந்தருளிக் காட் சிதந்து உமையே! நாமிப்போது, எழுந்தருளிய சோதிலிங்கத்தோடு, இத்தலத்தில்அநாதியாயுள்ள இலிங்கத்தையுஞ் சேர்த்து, யாவரும் பூசித்துக்க டைத்தேறும்படி நாமே பூசிப்போமெனக் கூறிக் கலப்பித்துப் பூசித்தோம், என்றாராக: வரகுண தேவர் சந்தோஷச் சமுத்திரத்தில் மூழ்கித் தன துறுப்புக்களெல்லாம்,நிலமுறப்பஞ்சாங்க,அட்டா ங்கமாகப் பணிந்து, தமதரண்மனையைச் சார்ந் தார். சிலநாட் கழிய, ஆத்திமாலையை யணிந்த சோழன், புலிக்கொடியுயர்த்திய தனது நால்வகை ச்சேனைகளோடும் கடல்பொங்கி யெழுந்ததைப் போன்று, பாண்டி நாட்டின்மேற் படையெடுத்து வந்தனன். இதையுணர்ந்த வரகுணதேவர், குதிரை மீதேறிக்கொண்டு, சோழன் சேனையுட் புகுந்து

போர்செய்யாநிற்கப் பஞ்சுக்குவியலில் பெருங்காற்றுப்புகுந்தா லெப்படிபறக்குமோ, அப்படிச்சோழன் சேனைகள் ஓட்டெடுத்தனர். விக்கிரமச்சோழன், மனநிலைகலங்கித் தன் சேனைகட்கு ஒளித்துக்கொள்ள வழிகாண்பிப்பான்போல், அவர்களுக்கு முன்னோடிப் போனான். அவ்வாறோடின சோழனைப் பாண்டியர் துரத்திக்கொண்டே வானமளாவியதெங்கும், தெங்குபோற் கமுகும், கமுகுபோற் கரும்பும், கரும்புபோற் செந்நெற்பயிரும் பொருந்திய வளமிக்க நிலங்களும் பிற்பட, சூதாடு கருவிகள்போன்ற *குயங்களையுடைய, மகளிர்கள் நீராடிச் சஞ்சரிக்குங் குளிர்ந்த துறையையுடைய காவிரிநதியின் தென்புறத்திலுள்ள திருவிடைமருதூரை யடைந்தனர். வரகுணதேவர் சோழனைத் துரத்துவதை விட்டு, அத்தினந் தைப்பூசமாகையால் காவிரியின் பூசத்துறையில் நீராடி, மருதின் கீழ் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை,வணங்கவேண்டிக் கீழைக்கோபுர வாயிலைக்கடந்து உட்சென்றனர். பிரமச்சாயை அவரோடு செல்லமாட்டாது புறத்தே நின்றது. உட்புகுந்த பாண்டியர் நெருப்பிலிட்ட வெண்ணெய்க் குன்றெனமன முருகி, எந்தையே! எப்புவனங்களையும் படைத்த சிவனே! எத்தேவர்களுக்குத் தந்தையே! எல்லாம் வல்ல முழுமுதற்பொருளே! வேதரூபமானவரே,

---

* ஸ்தனம்.

அவ்வெழுத்துக்களாலு மெட்டுதற்கரிய சோதிரூபரானவரே! பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியசந்திரர்களாய், இவ்வேழு மல்லாதவராயிருக்கின்றவரே! பண்ணமைந்த மழலை மொழியையுடைய உமாதேவியாரின் தலைவரே! தரிசித்தவர்களுக்குப் பேரானந்தத்தருந் திருக்கூத்தை யுடையவரே! ஆன்மாக்களுக்குச் சுகத்தைக் கொடுக்கப்பட்டவரே! பாம்பையணிந்த சடைமுடியையுடையவரே! அடியேனை வருத்திய பிரமஹத்தியை மாற்றியருளிய, மருதவாணரே என்று பற்பலவிதமாகத் துதித்துப் பன்முறை கீழ்விழுந்து வணங்கினர். மருதப்பிரான், வரகுணதேவரை நோக்கி வெம்பலர்பாலை வேய்ந்த வேந்தனே! உன்னை வருத்திய பிரமஹத்தியானது, கீழைக் கோபுரவாயிலில் நிற்கின்றது. நீ அவ்வழியிற் செல்லாமல்; மேற்றிசையிலுள்ள பொன்மலைபோன்ற பெரிய மேலைக்கோபுரவாயிலால், வெளியினீங்கிச் சொரணங்கிருந்து, பிறகு நமது மதுரைக்குச் செல்வாய் என்று திருவாய்மலர்ந்தனர். வரகுணதேவர், அவ்வாக்கியத்தைக் கேட்டுக் கோயிலைப் பிரதக்ஷிணஞ்செய்து, பிரிவாற்றாமையால் வாயில்கடோறும், அடிக்கடி கீழ்விழுந்து வணங்கியெழுந்து, உயர்ந்த மேலைக்கோபுரவாயில் வழியாகச்சென்று, தன் பெயரால் தங்கக் கலசங்களிட்ட, அழகிய கோபுரமொன்றைக் கட்டுவித்தனர். பின்னர் சில நாள், அத்திருவிடைமருதூரிலேயே வசித்துவந்தா

லங்கடோறுந் தவறாது மருதப்பிரானை வணங்கித் துதித்துவரும் நாட்களில், ஓர்நாள் திருடனொருவன் வரகுணதேவருடைய அரண்மனையிற் கன்னம்வைத்து, உட்புகுந்து *பண்டாரத்திலிருந்து மிகுதியான பொருள்களைக் களவுசெய்து, திரும்பி வெளியே வருங்கால், காவலாளர் விழித்துக்கொண்டு அக்கள்வனைப் பிடித்துக் கட்டி யிழுத்துக் கொண்டுவந்து, வரகுணதேவர் முன்விட்டார்கள். வரகுணதேவர், அக்கள்வனுடைய உடல்முழுதும் விபூதியிருக்கக்கண்டு, இவர் ஒரு பெரிய சிவனடியார். இவருக் கேதாவது, சிவபுண்ணியத்திற்குப் பொருள் வேண்டியிருக்கும். இவர் தம்மிடத்தின்மையால், நம்மிடத்துக் களவுசெய்தாராக வேண்டுமென்றுன்னி, அந்தோ, அவரைக் கட்டியிருந்த கட்டைச் சேவகராலவிழ்ப்பித்து, மிகவுமுபசாரஞ்செய்து பின்னுமதிகமான பொருள்கொடுத்து வணங்கி யனுப்பினார். இவற்றைக் கண்டார் பலராச்சரிய முற்றனர். இதனை,

"வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்த
பெரிய அன்பின் வரகுண தேவர்."

என்னும், பட்டினத்தடிகள் திருவாக்கானறிக.

---

* பொக்கசம்.

பின்னொருநாள், மாரிக்காலத்திரவில் ஊருக்குப்புறம்பேயுள்ள காட்டில் நரிகள், கூட்டங்கூட்டமாகக்கூடித் தங்கள் ஜாதிவழக்கம்போல் ஜாமந்தோறும், ம்போ, குவ்வா! குவ்வா!! குவ்வாவென்று ஊளையிட்டன. இக் கூச்சலானது, அரண்மனையின் பள்ளியறையில், சயனித்தபடியே சிவசிந்தனையிலிருக்கும், வரகுணதேவர் செவியிற் சம்போ, சிவா! சிவா!! சிவாவென்பதாகக் கேட்டது. உடனே வரகுணதேவர், தன்னமைச்சர்களையழைத்து, ஓ மந்திரிகளே! பெயுமுறங்கும்படியான இந்நள்ளிரவில் எம்பெருமான், திருவடிக்கன்புடையார் பலர், ஏதோ ஆபத்தால் சிவனை ந்துதித்து வருந்துகின்றனர். ஆகலின் நீங்கள் சென்று, அன்னோருக்கு நேரிட்ட விபத்தைநீக்கி, அவர்களை இங்கேயழைத்து வாருங்கள். சீக்கிரஞ் செல்லுங்கள் செல்லுங்களென்றனர். அவ்வார்த்தையைக் கேட்ட மந்திரிகள், வரகுணதேவரை வணங்கி, அரசனே! அது சிவனடியார்களின் கூச்சலன்று. * ஓரிக்குழாங்கள், மழைக்காலமானதால், நண்டு, நத்தைமுதலியவைகளைப் பிடித்துத் தின்று, கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து ஊளையிடுகின்றனவென்றார்கள். வரகுணதேவர் மந்திரிகளே! நீங்கள் சொன்னபடி *சம்புக்களேயாயினும், அவைகள் குளிரினால் வருந்திச் சிவனைப் பிரார்த்திக்கின்றனவெ

* நரிகள்.

ன்று, இரவுநீங்கு முன்னெழுந்து, கர்மானுட்டா னங்[illegible] முடித்துக் கொலுமண்டபத்தில் வந்தவு டனே, அநேகம் வேடர்களை வரவழைத்து, ஓ வேடர்களே! நீங்கள் காட்டிலுள்ள *ஊளன்களை யாதொரு தீங்குஞ் செய்யாமற் பிடித்துவாருங்க ளென்று கட்டளையிட்டனர். அவ்வுத்தரவைச் சிர மேற்கொண்ட வேடர்கள் வலைகளையும், கண்ணிக ளையும் வைத்துப் பிடித்துவந்து, அரசன்முன்வி ட்டு வணங்கி நின்றார்கள். வரகுணதேவர், அவை களுக்கு உயர்ந்த பீதாம்பரங்களாலும், சால்வைக ளாலும், கம்பளங்களாலும் அங்கிகள் தைத்துப் போட்டுப் பசியாற வாகாரங்களிட்டு, வணங்கிக் காட்டிற் செலுத்தினர். இவ்வதிசயத்தைக்கண்ட அறிவிலார் சிலர், இவ்வரசனுக்குப் பைத்தியம்பி டித்ததென் றெண்ணினர். அறிவுளார் பலர், அர சனுடைய அன்பின் தன்மையைப் புகழ்ந்து, துதி த்தனர். இதனாலன்றோ பட்டினத்தாரும்,

"ஓடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்த
பெரிய வன்பின் வரகுண தேவர்." என்றார்.

மற்றோர்தினம், மழைபொழியாநிற்க, அவ்விர வில் ஏரி, குளம், குட்டை, வயல்முதலிய இடங்க ளிலுள்ள தவளைகள், வானினின்றும் வீழ்ந்த குளி

---

* நரிகள்.

ர்ச்சிபொருந்திய புதுநீரினால், சந்தோஷித்துப் பேரிரைச்சலோடுங் கத்தின. தவளைகள், உருவத்தினாலும், நிறத்தினாலும், ஒலியினாலும் பலபேதங்களாகும். அவைகளிலொருவிதமான தவளைகளுண்டு. அவைகளை வறட்டுத் தவளைகளென்பார்கள். அத்தவளைகள், தங்கள் வழக்கப்படி, வர்ற! வர்ற!! வர்றவென்று கத்தின. அப்படிக் கத்தினது அரண்மனையில், தூங்காமற்றூங்கும் வரகுணதேவர்செவியில், அர! அர!! அரவென்னுஞ் சத்தமாகக் கேட்டது. வரகுணதேவர் உடனே எழுந்து, மந்திரிகளை விளித்து, ஓ மந்திரிகாள்! கறுத்துடைமையைப் போன்றிருக்கும், இவ்விரவில் சிவனடியார் சிலர், யாதோ துன்பத்தால் வருந்தி அரனைப் பிரார்த்திக்கின்றனர். நாம் கேட்டுஞ் சும்மாயிருக்கப்படாது. அடியாருக்கு நேரிட்ட ஆபத்தை நீக்குதல் பெருஞ்சிவபுண்ணியமன்றோ? ஆதலின் நீவிர் சென்றன்னோர் குறையை நீக்கி, யவர்களை யழைத்து வம்மின், என்றனர். மந்திரிகள் வேந்தனை நோக்கி, சுவாமி! அவை *பேகங்கள். மழையின் புதுஜலச் சேர்க்கையால், அவைகள் சந்தோஷித்துக் கூவுகின்றனவென்று, மிகப் பணிவோ டுரைத்தார்கள். வரகுணதேவர், நீவிர் சொன்னபடி அவைகள் *தவளைகளாயினும், ஜலமிகுதியினால் இரைய கப்படாது அரனைப் பிரார்த்திக்கினவாக விருக்கு

---

* தவளைகள்.

மொன்று, பொன் மணிலையும், இரத்தினங்களையும் அரிசி, நெய், தயிர், சாதமுதலியனவைகளிற் கலந்து, மந்திரிகளோடு தாமும் பாதசாரியாக நடந்து, எங்கெங்குமுள்ள ஜலத்திலிருக்கும், மண்டூகங்களைப் பணிந்து அவைகளுக்குத் தூவினர். இவ்வன்பினைக்கண்ட மந்திரிமுதலானோர், அரசனைக்கொண்டாடித் தாமும், சிவனிடத் தன்புமேற் கொண்டொழுகுவாராயினர். இதை பட்டினத்துப் பிள்ளையாரும்,

"குவளைப் புனலிற் றவளை யரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவின
பெரிய வன்பின் வரகுண தேவர்." என்றார்.

வேறோர் பகல் சிவபுண்ணிய ரொருவர், திருவிடைமருதா ருடையாருக்குத் திருவபிஷேகத் தைலத்தின் பொருட்டு, வளம்பொருந்திய எள்ளை வெயிலிற் காயவைத்திருந்தார். அவ்வழியே சென்ற அவ்வூரிலுள்ள னொருவன், அந்த எள்ளில் ஒரு பிடியெடுத்து வாயிற் போகட்டுக்கொண்டான். சொந்தக்காரராகிய சிவனடியார், அவனைப் பார்த்து; அடா! நீ எம்பெருமான் திருவபிஷேகத்துக்காக வேண்டிய எள்ளைத்தின் றெச்சிற்படுத்தலாமோ வென்று அவனைப்பற்றி, அவன் தன் வாயிலுள்ள எள்ளை விழுங்கியாவது, உமிழ்ந்தாவது போகாதபடிக் காத்து, வரகுணதேவர் முன்கொண்டு போயி

னர். சிவனடியார், வரகுணதேவரை வணங்கி நடந்த காரியத்தை யறிவிக்க, வரகுணதேவர் பிரதிவாதியை நோக்கி, நீயேன் எள் தின்றாயென்றார். அதற்கவன் மகாராஜனே! இச்சிவனடியார், சிவபெருமான் திருமஞ்சனத்துக்காக எள் கொடுத்துச் சிவபுண்ணியத்தை யடையப்போகின்றாரே. அடியேனும் இந்த எள்ளைத்தின்றால், மறுபிறப்பில் மாடாகப்பிறந்து, இந்த எள்ளையாட்டுகின்ற, செக்கையிழுக்கும் பெரும்பேறெய்தலாமென்று தின்றேன் என்றான்.

இதனைக் கேட்ட வரகுணதேவர், உடனே தன் சிங்காதனத்தை விட்டுக் கீழிறங்கிவந்து, அவனை வணங்கிச்சுவாமி! செக்கிழுப்பதுஒரு மாடல்லவே, இரண்டுமாடன்றோ வேண்டும். அதற்காகத் தேவரீர் ஒரு மாடாவீராகில், அடியேனும் மற்றொரு மாடாக வரும்படித் தங்கள் வாயிலிருக்கும் எள்ளைத் தயவுசெய்து அடியேன்கையிற் கொஞ்சம் உமிழவேண்டுமென்று பிரார்த்தித்தார். அவன் இவ்வார்த்தைகளைக் கேட்டுச் சந்தோஷமும், பயமுமடைந்தவனாய்த் தன் வாயினின்றுங் கொஞ்சம் உமிழ, வரகுணதேவர் அதைத் தன் கரத்தாலேற்று மிகச்சந்தோஷத்தோ டுண்டு, அவனை மிக்க மரியாதையோ டுபசரித் தனுப்பினார். இதைக் கண்டோரெல்லாருங் கொண்டாடினார்கள். இதனைப் பட்டினத்தடிகளும்,

"வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டுப்
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்த
பெரிய வன்பின் வரகுண தேவர்." எனத்
திருவாய்மலர்ந்தனர்.

பின்னொருநாள், வரகுணதேவர் மருதப்பரு டைய சந்நிதியின் வெளிப்பாடவீதியில் பிரதக்ஷிணம் வருகையில், இறந்த மனிதனுடைய ஊன் கழிந்த தலை யொன்றிருக்கக்கண்டு, அத்தலையைக் கையி லெடுத்துக்கொண்டு அதனைப் பார்த்து, சுவாமீ! தேவரீர் சிவபெருமானது திருக்கோயிலை வலம், வந்துவந்து, தேவரீருடைய உடல் முழுமையும் தேய்ந்தும், இன்னமும் உயர்முடைய தலையானது சுவாமியின் திருமாடவீதியில் இருக்கும் பெரும்பு ண்ணியத்தைப்பெற்றீர். சுவாமி! அடியேனுடைய தலையும் உம்மைப்போலிருக்க, அடியேனை ஆசீர் வதிக்க வேண்டுமென்று, பன்முறை வணங்கி அதைத் தமது முகத்தோடு முகஞ்சேர்த்துப், முத்த ங்கொடுத்து மிருந்தனர். இவ்வன்பினைக் கண்ட பல்லோர், வரகுணதேவரை வாழ்த்துதல் செய்த னர். இதனாலன்றே,

"மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி

உண்மைப் போல வெம்மிக் கலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்த
பெரிய வன்பின் வரகுண தேவர்.”

என்றார், பட்டினத்து சுவாமிகளும்.

ஒருதினம், வரகுணதேவர் மருதப்பரை வணங்கவேண்டி, ஆலயத்துட் சென்றனர். அதற்கு முன் ஒரு நாயானது, மலம் விசர்ஜ்ஜித்து ஓடிப் போயிற்று. வரகுணதேவர், அந்நாயின் மலத்தைக் கண்டு மனம்பதைத்து, நான் முதற்பிரதக்ஷிணஞ் செய்து வருவதற்குள், இம்மலத்தை யாரெடுக்கின்றாரோ. அவருக்கு என்தேயத்திற் காற்கூறு தருகின்றேனென்று, முதற் பிரதக்ஷிணஞ்செய்து வந்து பார்த்தார். அம்மலம் எடாமை நோக்கி, இரண்டாவது பிரதக்ஷிணம் வருவதற்குள் எடுப்பவர், என் தேயத்திலரைக்கூறு பெறுவரென்று இரண்டாவது பிரதக்ஷிணம் வந்தனர். அப்போதும் அது அப்படியே இருக்கக்கண்டு, மூன்றாவது பிரதக்ஷிணம் வருமுன்னெடுப்பவர்க்கு, என் தேயத்தில் முக்காற்கூறீவனென்று, மூன்றாவது பிரதக்ஷிணம் வந்தனர். யாருமெடுத்தாரில்லை. வரகுணதேவர், என் தேயத்தை யானேயுடையனென்று, தானே தன் கையினாலெடுத்தனர். இதைக் கண்டவ ராச்சரியமுற்றனர். இவ்வன்பின் தன்மையை நோக்கிப் பட்டினத்துப் பிள்ளையாரும்,

"கோயிலின் முற்றத்து மீமிசை கிடப்ப
வாய்த்தன வென்று நாய்க்கட்ட மெடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவர்."

என்றருளினர்.

ஒருநாள் வரகுணதேவர், மருதவாணர் சந்நிதிரு ர்த்தத் திருவாயிலைத் திறந்து வாசிக்க, வழியிற் றீ ந்தத்தோர் வேம்புக்கனியைக் கண்டு, அது சிவலிங்க வுருவமாகத் தனக்குத் தோற்றவே, மிகவுமதிசயங் கொண்டு, தமது கரங்களாலெடுத்துக் கண்களி லொற்றித் தன்னெதிரே போந்து, மந்திரிகளை நோக்கி இது என்ன கனி யென்றார். அவையோர்கள், அரசே! அது வேம்பங்கனி, இக்கனியைக் காய்க் கின்ற மரமொன்றிருக்குமென் றருகினின்றதொன் றைக் காண்பித்தார்கள். வரகுணதேவர் வேம்ப மரத்தைக் கண்டு, மிகவும் மனமுருகி, ஐயோ: இவை சிவலிங்கங்களின் திருமேனியின் குறிய உருவைத் தாங்குகின்றதே. அதனாலன்றோ, மேனி வெம் பிக் கிறங்குகின்றன, என்று வெகு பரிதாபமுற்று, திருவிடைமருதூரில் உள்ள எல்லா வேம்புமரங் களுக்கும் பந்தரிமைத்தனர். இவ்வன்பைக் கண்ட வர் அரசனைப் புகழ்ந்து கொண்டாடினர். இதை,

"காம்புருக் தரித்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்த
பெரிய வன்பின் வரகுண தேவர்." என்னும்

பட்டினத்தடிகள் திருவாக்கானறிக.

வரகுணதேவருக்குத் தோற்றோடிப்போன விக்கிரமச்சோழன், இவருடைய குணாதிசயங்களைக் கேள்வியுற்று, மிகவும் ஆச்சரியமும், பயமுமடைந்தவனாய் "ஈசனடிக் கன்புடையார்போல் வலியவரில்லை" என்ற ஆன்றோர் வாக்கின்படி இவரைவெல்ல நம்மாலியலாது. ஆயின் சாமுத்திரிகா லட்சணமுற்று மமைந்து, திருவிற்கும் மேம்பட்டத்திருவினையுடைய நமது புத்திரி காந்திமதியென்னும் பெண்கள் சிகாமணியை, இவருக்குக் கொடுத்துறவாக வேண்டுமென்று கருதினனாய்த் தன்னருங் குமாரத்தியை யழைத்துவந்து, வரகுணதேவருக்குத் திருமணஞ்செய்வித்தனன். வரகுணதேவர் விவாகமான அன்றிரவில் பள்ளியறைசென்று, சிவசிந்தனையோடு சயனித்திருந்தனர். இவர் மனைவியாரைத் தோழிகள் வெண்மையான உயர்ந்த பட்டாடைகளாலும், நவரத்தினாபரணங்களாலும் அலங்கரித்து, களபகஸ்தூரி முதலிய வாசங்களைப்பூசிப் பள்ளியறையுட் கொண்டுபோய் விடுத்தனர். வரகுணதேவர் அவரது சௌந்தரியாதிக்யத்தைக் கண்டு, அதிசயங்கொண்டு வணங்கி, அவர் கரத்தைப்பற்றிக் காவலறியாவண்ணம் வெளியிற்போந்து, மருதப்பர் சந்நிதியையடைந்து திருக்கதவைத்தொட்டு "மருதநாயக" என்றழைத்தனர். மருதவாணரும், திருக்கதவந் திறந்து "வரகுணவருக" என்றுள்ளழைத்துச் சென்றனர். வரகுணதேவர் மருதப்பர் திருமுன்னர்நின்று, எம்பெரு

மானே? இவ்வுலகில் மிக்க அழகான பொருளை துவோ, அது தேவரீருடையதென்று, அடியேன் நினைத்திருக்கின்றேன். இதோ இந்தப் பெண்கள் நாயகமும், மேலான அழகினையுடையவராயிருக்கின்றார். இவர் தேவரீருக்கே யுரியவர். ஆகையால் இவரைத் தேவரீர் அங்கீகரித்துக் கொள்ளல்வேண்டுமென்று, தன் நாயகியாரை எதிரில்விட்டு வணங்கித்துதித்து வெளியே வந்துவிட்டனர். உடனே திருக்கதவுந் திருக்காப்பமைந்திருந்தது. வரகுண தேவர் ஒருவர் கண்ணுக்குந் தெரியாதபடி வந்து பழையபடியே படுத்துக்கொண்டனர். சூரியோ தயமாதலும், கோயிலர்ச்சகர் திருப்பள்ளி யெழுச்சிக்காக உட்சென்று, சிவலிங்கப் பெருமானுக்கு ஓர் புறத்தினின்றும் ஒரு ஸ்திரியின் கைதொங்கக் கண்டு, பயந்து வரகுணதேவருக்குத்தெரிவித்தனர். வரகுணதேவர் இதைக்கேட்டு, ஆலயத்திற் கோடி, இலிங்கத்தினின்றுந் தொங்குகின்ற திருக்கரத்தைக் கண்டு, மிகவும் வருந்தித் தமது வலக்கரத்தைப் பார்த்து, ஏ: கரமே! எமதாண்டவருக்குப் பிரீதியாகிய பொருளை நீ முன்பின் யோசியாதபடி ஏன் தொட்டனை! அதனாலன்றோ, அவர் அதைமாத்திரம் வெளியில் வைத்திருக்கின்றார், என்று கோபித்து, இடக்கரத்தில் வாளைவாங்கித் தன் வலக்கரத்தை வெட்டும்படி ஓச்சினர். சிவபெருமான் அசரீரியாய், யாவருங் கேட்கும்படி, அன்பனே! இவ்வுலகிலுள்ளார் உன்னைப் பைத்தியம் பிடித்தவனென

ன்று நினைத்திருக்கின்றனர். இப்போதும் நீ கொடுத்த பெண்ணை நம்முள் ஐக்கியஞ்செய்துகொள்வோமேயானால், உன்னை மிகவும் ஏளனஞ்செய்வார்கள். ஆகையால் உன்னுடைய அன்பின் பெருமையை யாவருக்குந் தெரிவிப்பான் வேண்டி, இக்கரத்தைமாத்திரம் வெளியிற் காட்டியிருக்கின்றனம். இதோ இழுத்துக்கொள்கின்றோம். நீ கவலைப்படற்க. உன் கரத்தையும் வெட்டற்க. என்று யாவருங்காணத் தன்னுள் ளடக்கிக்கொண்டனர். அக்கால், தேவர்கள் பூமாரிபெய்தனர். துந்துபி தொனித்தது, அரகரவென்னுங் கோஷங் கடற்போன் முழங்கிற்று. வரகுணதேவரும், ஆனந்தத்தினால் மெய்மறந்தனர். சிவபெருமான் வரகுணதேவர் கேட்கும்படி, அரசனே! சோழனுக்கு இவ்வளநாட்டைக்கொடுத்து, நீ நமது மதுரைக்குச்செல்வாயென்று கட்டளையிட்டனர். இப்பணியைச்சிரமேற்கொண்ட வரகுணதேவரும், விக்கிரமச்சோழனுக்குக் காவிரிநாட்டை மீட்டுங்கொடுத்துத் திருவிடைமருதூரைப் பன்முறை வணங்கி, நீங்காமனீங்கி அரிதில் வழிக்கொண்டனர். இதனை,

"விரும்பின கொடுக்கை பாம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவர்."

என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கானறிக.

இதுநிற்க. அரிதிற்சென்ற வரகுணதேவர் திருநாகேச்சுரம், சிவபுரம், திருக்கலயநல்லூர், கும்பகோணம், திருவலஞ்சுழி, திருவையாறு, திருநாகைக்காரோணம், அகத்தியான் பள்ளி, திருக்குழகர் கோடி, திருப்புத்தூர் முதலிய க்ஷேத்திரங்களை வணங்கிக்கொண்டு, உயர்ந்த *மிருக மதத்தையும், சூடிய மலர்மாலையையும், உடம்பிற்பூசிய சந்தனக் குழம்பையும், மார்பில் எழுதிய †தொய்யில் முதலியவைகளைத் தந்து, அதற்குப் பதிலாக முத்துக்களையும், பொன்மணிலயும் வாரிக்கொண்டு வருவதைப் போன்று, நீராடும்பெண்கள் சூழப்பெற்ற, துறையையுடைய வைகைநதியினால், அழகையைப் பெற்ற திருவாலவாய்க்குச் சென்று, பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, அங்கயற்கண்ணம்மையாரையும், சோமசுந்தரக் கடவுளரையும் பன்முறை கீழ்விழுந்து பணிந்தெழுந்து, கரங்களை யுச்சியின்மேற் கூப்பி, எனது கடவுளே! அடியேனைப்பற்றிய பிரமஹத்தியை யொழித்தருள வேண்டுமென்று, அடியேன்:

"எண்ணிய வெண்ணி யாங்கே யான்பெற முடித்தாய் போற்றி, பண்ணியன் மறைகள் தேறாப் பான்மொழி மணாளா போற்றி, புண்ணியர் தமக்கு

* கஸ்தூரி. † குங்குமக்குழம்பினால் ஸ்தனங்களில் எழுதுவது.

வேதப் பொருளுரைப் பொருளே போற்றி, விண்ணிழி விமான மேய சுந்தர *விடங்க போற்றி.

இடருறப் பிணித்த விர்தப் பழியினின் றென்னை யீர்த்துன், னடியிணைக் கன்ப னாக்கும் அருட்கடல் போற்றி சேற்கண், படவரல் பணனை போற்றிக் கடம்பமா வனத்தாய் போற்றி, கடர்விடு விமான மேய சுந்தர விடங்க போற்றி.

"எவ்வுட லெடுத்தேன் பேனுள் எண்ணிலாப் பிறவி தோறும், அவ்வுட லெல்லாம் பாவம் அறம் பொருட் டாகவன்றோ, †தெவ்வுடல் பொடித்தா யுன்றன் சேவடிக் கடிமை பூண்ட, இவ்வுட லொன்றே யன்றோ எனக்குட லான தையா." என்று, பலவாறு துதித்துத் தனதரண்மனை எய்திச் செங்கோ னடாத்திவந்தனர்.

வரகுணதேவர், தருமதேவதை நான்குபாதங்களில் நடக்கவும், தானுந் தன்குடிகளும், சிவனிடத் தன்பு மருதவண்ணமுஞ் செங்கோல் செலுத்திவரும் நாள்களில், சிவபெருமான் புகழைப் பெரியோர் சொல்லக்கேட்டு வருகையில், வேதாகம புராணங்களெல்லாம் எடுத்துச் சொல்வதும், எல்லாவுலகங்களுக்கும் மேம்பட்டுள்ளதும், சிவலோக மென்றறிந்து, அதனைக் காணவேண்டுமென்னுங்

* விடங்கம்-உளிநீக்கமுள்ளது. டங்கம் - உளி. வி: எதிர்மறை உபசர்க்கம். † பகைவர்.

காதல் மிக்குடையராய், சிவராத்திரி நாளில், சொக்கலிங்கப்பெருமான் சந்நிதியடைந்து, வணங்கி, சுவாமி! தேவரீர் அடியார் திருக்கூட்டங்கள்சூழச் சிவலோகத்தில், அம்மையாரோடு வீற்றிருக்கும், திருக்கோலத்தைத்கண்டு வணங்க, அடியேனுக்கோர் கருத்துண்டாயது. என்று குறையிரந்து கூறினர். இவ்வாறு குறையிரந்த வரகுணதேவருடைய அன்புக்கெளியராய், சொக்கலிங்கப் பெருமான் அச்சிவலோகத்தை, மீண்டு வெருவித்துக் காட்டுவோமென்று திருவுள்ளத்தில் நினைத்தருளினர். அவ்வெண்ணத்தை யுருத்திரலோகமறிந்து, கோடிசூந்திரர்கள் ஒளிவீசி மேயாரிடத்தினின்றதுபோல், விண்ணிலுலாவும் இருசுடர்களு மொளிமழுங்குமாறு வந்துதோன்றியது. சிவபெருமான் திருநந்திதேவரையழைத்து, நம்மிடத்து மெய்யன்பு பூண்ட வரகுணன், நமதுலகத்தைத்காண்பதற்கு விரும்பினனாதலால், நீ அவனுக்குக்காட்டுகவென்று பணித்தருளினர். நந்தியெம்பெருமான், அப்பணியைச்சிரமேற்கொண்டு பணிந்துசென்று, வரகுணதேவரை யழைத்துக்கொண்டு போய், கருப்பூரம்போற் கமழ்ந்து, பதினாயிரம் யோசனைதூரம் பரிமளிக்கும், இலட்சம் இதழ்கள் பொருந்திய, கமலங்கள் மலர்ந்த ஓடைகள் புடைசூழ்ந்த ஆறுகளும், அளவிறந்த தேவமாதர்களும், தும்புருநாரதர்களும், வீணையேந்திப் பாடுமினிய கானமும், அமுத வாவிகளும், பொற்றாமரைத் தடாகங்களும், அரம்பா ஸ்திரீகள்

விளையாடுகின்ற மரகதச்சோலைகளும், தேவர்கள் பதங்களும், பால் அகழியும், பொன்மதில்களும், பொற்கோபுரங்களும், மங்களமிக்கழகு வாய்ந்த வீதிகளும், மாளிகை வரிசைகளும், உருத்திரர்கள் உருத்திரமகளிரோடு வாழும் மாளிகைநிரைகளும், அபரற்ற செல்வங்களும், போகங்களுங் காட்டி, பிரமன் பதமும், விண்டுவாழ்பதமும், உருத்திரபதமும், அஷ்டதிக்குப் பாலகருறைவிடங்களுங் காட்டி, விடியுமுன் நீராடி முறைப்படி திருவெண்ணீறு தரித்து, நமது பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலைத் திருவலமிட்டு, திருநந்தவனத் திருப்பணிசெய்து, மலர்கொய்து ஆய்ந்துதொடுத்து, சிவபுராணத்தைச் செவியாரக்கேட்டு, இந்நிலவுலகவாசிகளாய், இறுதியில்லாப் போகம் நுகர்ந்து வாழ்பவரிவர்கள். பரிசுத்தமுடையவராகிப் பஞ்சசுத்தி செய்து, உள்ளும் புறம்புஞ் சிவநேயமுடையராய், ஆகமவிதி முறைபால் சோடசோபசாரத்தாலும், பனைக்குக் காயங்களின் ஒருப்பாட்டாலும், அருச்சனைசெய்து கடவுளையகராகிய சோமசுந்தரக் கடவுளின் பக்கலில் அடைந்தவர்களிவர்கள், யோகசாதனை செய்தவர்கள், சிவபெருமானுக்குப் பிரீதியாக யாகங்களைச்செய்த அந்தணர்கள், தண்ணீர்ப் பந்தல் வைத்தன்முதலிய பெரும்புண்ணியங்களைச் செய்தவர்களிவர்கள். வேதநெறியிலாவது, ஆகமநெறியிலாவது தமதுடம்பிலணிந்த விபூதியுடையவரும், சிவபெருமானது திரு

வைந்தெழுத்தை உச்சரிக்கும் நாவை யுடைய வரும், சிவபெருமானுக்கு அடியவராய், அச்சிவ பெருமான் திருப்புகழைக் கேட்டு வினைவலியைத் தொலைத்தவர்க ளிவர்கள். உருத்திராக்ஷ கண்டிகையும், திருநீறுமணிந்தவ ரெவராயினும், அவர் ஜாதி, குணங்குறியபாது அவரைச் சிவனேயென றுணரும், அன்பினால் பிறவியின்வேரை யறுத்தவர்களிவர்கள். சிவபெருமானை அருச்சிப்பவர்கட்கு இசையுங் காரியங்களைச் செய்துவந்தவரும், அடியவரைச் சிவபெருமானேயென்று கருதிப் பூசித்து, அறுசுவையுணவை யுண்பித்தவரும், சிவனடியவர்க்குச் செய்யுங் குற்றேவலே, பெருந்தவமாக விரும்பிச் செய்து உயர்பதவி யடைந்தவர்களிவர்கள். சோமசுந்தரக்கடவுளருக்கு, ஆலயமுதலிய திருப்பணிகள்செய்து, பூதிசாதனவழி யுலகாண்டு கதியடைந்த, உன் வமிசத்தரான பாண்டியரிவர்கள். என்று, வேத்திரப்படையால் குறித்துக் காட்டிச் சிவபெருமான் சந்நிதிமுன் விடுத்தனர். அங்கே வேதாகமங்கள் வடிவுகொண்டு இருபுடைநின்று வாழ்த்தவும், தும்புருநாரதர்கள் கைகளில் யாழேந்திப் பாடவும், அரம்பைமாதர் நடிக்கவும், தேவர்கள் இடங்கிடைக்காமல் ஒதுங்கியிருக்கவும், விநாயகக்கடவுளும், முருகக்கடவுளும், வீரபத்திர மூர்த்தியும், ஏவின பணிசெய்து நிற்கவும், பிரம விஷ்ணுக்கள் வாய்பொத்தி, தூசொடுக்கி யொருபுறமொதுங்கி நின்று தங்கள் குறைகளைச் சாற்றவும்,

இந்திரன் முதலிய திக்குப்பாலகர்கள் தாங்கள்செய்யுங் காரியக்குறைவுகளைக் கூறி யொருபுறம் நிற்கவும், சிவகணத்தலைவர்கள் வாயில்கடோறுங் காவற்செய்யவும், சித்தர், கின்னரர், கிம்புருடர், விச்சாதரர் முதலிய தேவகணங்கள் பரவாநிற்கவும், எங்கள் பிறவியையொழித்தருளுகவென்று, மிக்க மெய்யன்பினால் கண்களிலானந்த பாஷ்பம் பெருக, தரிசித்தவண்ணமாய் முனிவரர்கள் சங்கர, சிவசிவ, சம்போவென்று துதித்தோதவும், அவரவர்கட்கு வேண்டிய வரங்களை வேண்டியபடி வழங்கி, உமாதேவியார் புன்முறுவல் செய்ய, ஆயிரஞ்சூரியர்களொளிவீசுஞ் சிங்காதனத்தில் எழுந்தருளியிருந்த சிவபரஞ்சுடரை, வரகுணதேவர் கண்டிறைஞ்சியுரைதடுமாறவும், மெய்ப்புளகிக்கவும், உரோமஞ்சிலிர்ப்பவும், பரவசத்தராய், இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பி,

"அங்கணா போற்றி வாய்மை யாரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல காரணா போற்றி நெற்றிச்
செங்கணா போற்றி யாதி சிவபரஞ் சுடரே போற்றி
எங்கணா யகனே போற்றி யீறிலா முதலே போற்றி.

"யாவையும் படைப்பாய் போற்றி யாவையுந் துடைப்பாய் போற்றி, யாவையு மானாய் போற்றி யாவையு மல்லாய் போற்றி, யாவையு மறிந்தாய் போற்றி யாவையு மறந்தாய் போற்றி, யாவையும் புணர்ந்தாய் போற்றி யாவையும் பிரிந்தாய் போற்றி.

என்று பலவாறு துதித்து நிற்ப, தோன்றிய சிவலோகம் மறைந்து முன்பிருந்தவாறு பிராட்டியுந் தானுமாகச் சொக்கலிங்கப்பெருமான் வீற்றிருந்தனர். வரகுணதேவர் கண்டு வணங்கி, கண்ணீர் தாரைதாரையாய் வழியநின்று,

"நாயினே னென்னை நடுக்கும் பழியகற்றித்
தாயினே ராகித் தலையளித்தாய் தாள்சரணஞ்
சேயினேன் காணச் சிவலோகங் காட்டிப்பின்
கோயினேர் நின்றவருட் குன்றே நின் றாள்சரணம்.

"மாழாந்து செய்யும் வினைவழிபோய் மன்னரகில்
தாழா தடியனேற் கன்புதந்தாய் தாள்சரணம்
ஏழாகி நான்கு வகையா யெழுபிறப்பும்
பாழாக வென்னைப் பணிகொண்டாய் நின்சரணம்.

"வெங்கட் பழியின் வினையேனை வெருக்கித், திங்கட் குலக்களங்கந் தீர்த்தாய்நின் தாள்சரணம், அங்கட் சிவபுரமுண் டன்புடையார்க் கென்பதையின், றெங்கட்குக் காட்டி யிசைவித்தாய் தாள்சரணம்."

என்றநேகவிதமாகத் துதித்து எம்பிரானருள் பெற்று, பின்னர், பல திருப்பணிகள்செய்து சில நாள் கழிந்தபின், இவ்வுலகவாழ்வைத் துறந்து சிவபெருமான் திருப்பாத நீழலின் கீழ், இரண்டறக்கலந்தனர்.

---

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக

ஆழ்க தீயதெல்லா மரனாமமே.
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்.

# முடிபுரை.

யாமிதுகாறுங், கூறிப்போந்த வரகுணதேவர் சரித்திரத்தை வாசிக்கு மன்பர்களுக்கோர் சந்தேகம் நிகழும். அஃதென்னெனின்: இப்பெரிய வரை யறிவுள்ளார்க்கு, நரிகளரற்றினவென்றும், தவளைகள் கத்தினவென்றும், வேம்புக் கனிகளென்றுந் தெரியாது, முறையே சிவனடியார் போற்றுதலென்றும், சிவனென்றுங் கொண்டது தவறாகாதோ வெனின்!

அற்றன்று. யாமறைகுதும்: பேய்க்கோட் பட்டாரொருவன் புரியுங் காரியங்கள், பேயின்காரியமாகி நிற்றல்போலப் பசுப்போதமற்றுச் சிவபோதமுற்ற இவ்வரகுணதேவர் சரித்திரமும், சிவன் மாட்டெழுந்த அன்பின் சரித்திரமேயாம். அவ்வன்பும், தலையன்பு, இடையன்பு, கடையன்பென மூவகைத். தாயது. நாயகி நாயகனது. பெயர்

கேட்டவுடன் வசமழிதல் தலையன்பும், அவனைக் கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவனைக் கூடினவுடன் வசமழிதல் கடையன்புமாம். அவ்வாறே, பக்குவான்மா சிவனது பெயர் கேட்டவுடன் வசமழிதல் தலையன்பும், அவரைக் கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவரைக் கூடினவுடன் வசமழிதல் கடையன்புமாம். இவ்வரகுணதேவர் தலையன்பிற் சிறந்தவர். ஆதலினன்றே, தாமடைந்த பிரமஹத்தியை சிவனருளால் நீக்கப்பெற்றதும், வேதங்களாலு மெட்டுதற்கரிய சிவபெருமான் அம்மையாரோடுஞ் சிவலோகங்காட்டப் பெற்றதும், பின்னர் சிவபெருமானது திருவடி நீழலடையப்பெற்றது மென்க: ஆகலான் நாமும், இவ்வரகுணதேவரைப் போன்று சிவபெருமானுக்கும், அவரது மெய்யன்பர்களுக்கும் பக்தி செலுத்துவோமாயின் சிவனருளைப்பெற் றுய்வோமென்பது சத்தியம். சுபம். சுபம். சுபம்.

குருவின் திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ தில்லையம்பலவர்

# உயிர்வருக்கமாலை.

விநாயகர் காப்பு.

நேரிசை வெண்பா.

செம்பவள வாயுமையுஞ் சேர்புலிபாம் புங்காண
அம்பலத்துளாடுமவ் வத்தன்மேல்-செம்மொழியா
னிவர்க்க மாலைசொல வானைமுகா நீயென்றன்
நாவினிடை நின்னருளை நாட்டு.

இதுவுமது.

கட்டளைக்கலித்துறை.

பொன்னுரு மேனிப் புரிசடை யண்ணலைப்
போற்றுதற்கு, என்னுலியன்ற வருத்தமுற் றேனவ்
வருத்தமெல்லா, முன்னு லினிது நீங்கிடுமென் றே
யுனை யுன்னியுன்னி, முன்னு லடிதொழு வேற்க
ருண் முத்துக்கு மூத்தவனே.

---

நூல்.

அருளே வடிவான வம்பலவா நின்னின்
அருளே வடிவா மமலை--அருளே
வடிவான மைந்தரும் வாழயான் வாணாள்
குடியாக வாழாதென் கூறு. (1)

ஆரணியுஞ் செஞ்சடையி லார்வமுற வோர்மதியு
நீரணியும் வித்தகனே நின்மலா--சீரணியும்
ஆரணனே பூரணனே யம்பலவா யான்வாழக்
காரணனே நீயாகுங் கார். (2)

இவ்வுல கோரகலுக் கேற்ற மணிவிளக்கா
மவ்வுல கோரேத்து மம்பலவா--எவ்வகையும்
பாவியே யானாலும் பார்த்தருள வேண்டாவோ
கூவியே நிற்பவனைக் கொண்டு. (3)

ஈவதுவி லக்காம லேந்திழைமா ரீந்தருளு, மாவ
ணங்கள் சேர்தருநல் லம்பலவா-கோவணங்கொண்
டார்த்தே யமர்நீதிக் கின்னருட்செ யுன்னருளைப்
பார்த்தே யிருக்குமெனைப் பார். (4)

உம்பரெலாம் போற்றவோ ருத்தமனுந் தான்கூமக்க
வம்பிகைகண் டார்வமுற வம்பலவா-செம்பதுமச்
சேவடியா யுன்றாட்டைச் சேரலர்க்குக் காண்பித்
தாய், தாவடியேற் குன்றாட்டைத் தான். (5)

ஊனின்றி யென்பா முருவமதைத் தாங்கிவருங்
கானின்ற வம்மைதனை யம்பலவா--மேனின்றிங்
கம்மையே வாவென் றழைத்தாற்போ னாயேனை
யிம்மையே நீயழையா தென். (6)

எல்லாருங் கண்டேத்து மென்றொளிசே ருண்
ணடியை, அல்லாருங் கண்டத்தா யம்பலவா-சொ
ல்லாரும் நாவலூர் நம்பிக்கு காட்டினாய் நாயேற்
குங் காவலா வுன்னடியைக் காட்டு.

ஏரணியுந் தீர்த்தங்க ளெங்கெங்குந் தானுள்ள
ஆரணியு மம்பொன்னா மம்பலவா--நாரணியுங்
நீலகண்ட மென்னோர்க்கு நீக்கியவா றன்பத்தை
ஆலகண்ட மென்பதற் கருள். (8)

ஐந்தெழுத்தா மந்திரத்தி னுர்வமுமாந் தில்லைவா
பூந்தணர்க ளேத்துகின்ற வம்பலவா-ஐந்தெழுத்தும்
போற்றாதே வாணாளைப் போக்கிவிடும் புல்லியனைத்
தேற்றாதே வைத்ததென்னோ தேற்று. (9)

ஒன்றி யிருந்து நினைமின்க ளென்றுரைத்த
அன்றுநா வுக்கரசை யம்பலவா--என்றுமங்கா
யென்றழைத்த வாயா லெனையழையா தென்னே
யோ, கன்றழைத்தாற் றாயிரங்கா தோ. (10)

ஓடிப் பழமறைக ளுன்னடியை யோராதே
யாடித் திரிகருநல் லம்பலவா--பாடிமிகப்
பத்திதந்த சுந்தரர்க்குன் பாதாம்பு யங்கடுத்தை
சற்றிவந்த தென்னோநீ சொல். (11)

ஔவிய முள்ளாரை யாடல் படவிடுக்கும்
நவ்வியஞ் சேர்கரநல் லம்பலவா--கௌவைப்
புனலாடுஞ் செஞ்சடையாய்ப் புண்ணியனே யெ
ன்றன், மனநாடி நின்றன் னருள். (12)

முற்றுப் பெற்றது.

[illegible]
உ. வே. [illegible]